மக்களோ லட்சம்—மகத்தான

துவக்கம்

மாரிபெய்தும் மனவுறுதி குலையவில்லை

பெரியாரல்ல—பெரிது கொள்கையே!

மாவட்டத் தளபதிகளின் முழக்கம்

தலைநகர் தந்த தீர்ப்பு!

Phone No. 4502 Regd. No. M. 5458

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (19—9—49) வெளியூர் (20—9—49) | இதழ் 41

திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா

சென்னை, செப். 19—

"திராவிடர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாவின் மாபெரும் கூட்டம் சென்னை ராபின்சன் பார்க் மைதானத்தில் நேற்று மாலை, மிகச் சிறப்பாக நடந்தேறியது.

ராபின்சன் பார்க் மைதானமே இதுவரையில் கண்டிராத அளவுக்கு, ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள் குழுமியிருந்தனர்.

சொற்பொழிவாளர்கள் 26 பேரும் அமர்வதற் கேற்ற வகையில் மேடை உயரமாகவும், அழகுறவும் அமைக்கப்பட்டிருந்தது. வண்ணக்கொடிகளும், பல்வேறு வண்ணக் காகிதத் தோரணங்களும், மேடையையும், பரந்த மைதானத்தையும், அழகுபடுத்தி, அசைந்தாடிக் கொண்டிருந்தன. மின்சார விளக்குகள் பேரொளி பரப்பி, நீலவானில் தோன்றும் நட்சத்திரக் கூட்டம்போல், காட்சியளித்துக் கொண்டிருந்தன.

மாநாடு-கூட்டி, கழகக் கொடியைப் பற்றி முடிந்த முடிவு செய்யும் வரையில், தற்காலிகமாகக் கொள்ளப்பட்ட கொடிகள் (மேல் அரைப்பகுதி கறுப்பாகவும்-கீழ் அரைப் பகுதி சிவப்பாகவும் அமையும்படி அமைக்கப்பட்டது) மைதானத்தின் நடுவிலும், மேடையின் அருகிலும், நீண்ட கம்பத்தில், எழிலுடமிழப் பறந்து கொண்டிருந்தன.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்னாலிருந்தே, மக்கள் திரள் திரளாக நாலாப் பக்கத்திலிருந்தும் வந்து குழுமிக்கொண்டேயிருந்தனர். குறிப்பிடப்பட்ட சொற்பொழிவாளர்களும், வேற்றூர்களிலிருந்துவந்த கழகமுக்கியஸ்தர்களும் ஒவ்வொருவராக வந்து மேடையின் மீது அமர்ந்தார்கள். கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு ஏறத்தாழ அறுபதினாயிரம் அளவில் இருந்த கூட்டம், முடியும் தருவாயில் ஒரு லட்சத்தையும் தாண்டி நிற்கும் அளவுக்குப் பெருகிவிட்டது.

கூட்டம் சரியாக மாலை 4-மணிக்குத் துவக்கப்பட்டது.

மேடை மீது அமர்ந்திருந்த முக்கியத் தோழர்கள்: பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, சி. என். அண்ணாத்துரை, கே. கே. நீலமேகம், இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்பத், கே. ஏ. மதியழகன், இரெ. இளம்வழுதி, ஏ. சித்தையன், சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன், மு. கருணாநிதி, அரங்கண்ணல், சி. டி. டி. அரசு, டி. எம். பார்த்தசாரதி, மணிமொழியார், கே. கோவிந்தசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். முத்து, தங்கபழம், எஸ். நீதிமாணிக்கம், கே. வி. கே. சாமி, குடந்தை வி. சின்னத்தம்பி, எம். எஸ். மொய்தீன், காஞ்சி கல்யாணசுந்தரம், கா. அப்பாதுரை, முத்து, சத்தியவாணிமுத்து, என். ஜீவரத்தினம், சி. வி. ராஜன், சஞ்சீவி. ஈ. வே. ஆ. வள்ளிமுத்து, கணேசன், சங்கரையா, என். எஸ் இளங்கோ மற்றும் பல முக்கியஸ்தர்களாவார்கள். மாகாணங்களின் பல பாகங்களிலிருந்தும் கழகத் தோழர்கள் வந்திருந்தார்கள்.

கூட்டம் துவக்கப்பட்டதும், குடந்தை கோவிந்தராஜன் அவர்கள் பாரதிதாசன் அவர்களின் பாடல்களை இனிமையாகப்பாடிக் கூட்டத்தினரை மகிழ்வித்தார்கள். கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் படியாகத் தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களைத் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். தோழர்கள் கே. கோவிந்தசாமி, வடசென்னை பி. வி. முத்துச்சாமி ஆகிய இருவரும் ஆதரிக்க, தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமை யேற்றார்கள்.

கூட்டத்தின் நோக்கத்தைத் தலைவர் அவர்கள் விளக்கிக்கூறிய பின்னர், தோழர்கள் ஏ. சித்தையன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், எஸ். ஆர். சுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. நெடுஞ்செழியன், மதுரை முத்து, கே. கே. நீலமேகம், சத்தியவாணி முத்து, சி. என். அண்ணாத்துரை ஆகியோர் பேசினார்கள். (சொற்பொழிவுகளின் சுருக்கம் தொடர்ந்து வெளியிடப்படும்.)

தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது மழைத் துளிகள் விழ ஆரம்பிக்கவே, பெருமழை வருமோ? என்ற அச்சம் ஏற்பட்டது. தோழர் கே. கே. நீலமேகம் ஆற்றிய வீரவுரை கேட்டு, மக்கள் அசையாது மழை வந்தாலும் பரவாயில்லை என்ற திட முடிவுடன் அப்படியே அமர்ந்துவிட்டார்கள். இடையில சிறிது நேரம் விட்டிருந்த மழைத்தூறல், தோழர் சி. என். அண்ணாத்துரை பேசும்போது, பெய்யவே ஆரம்பித்துவிட்டது. தலையும், ஆடைகளும் நனையும் அளவுக்கு மழை பெய்ய ஆரம்பித்தது. மக்கள் அத்தனைக்கும் ஆடாமல் அசையாமல் இருந்து; அண்ணாவின் சொல் மழையில்

பெத்தாம்பாளையம்
பழனிச்சாமி

திளைத்திருந்தனர். ஆடைகளெல்லாம் நனைய, அண்ணாத்துரையின் தலையிலும், முகத்திலும் நீர்வழிந்தோட, முகத்தைத் துடைத்துக்கொண்டே அவர்வீர முழக்கம் செய்தார்கள். மேடையில் நீர் நிரம்பி வழிந்தோட ஆரம்பித்தது. மக்கள் அனைவரும் மழையில் நனைந்து கொண்டே நின்றுகொண்டு, சொற்பொழிவை ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். தோழர் அண்ணாத்துரை அவர்கள் சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம், உணர்ச்சி மிகுந்த, தெளிவுபயக்கும், அரிய சொற்பொழிவாற்றினார்கள். மழை பெய்ததின் காரணமாக மற்றச் சொற்பொழிவாளர்கள் பேச முடியாமற் போய்விட்டது. தோழர் அண்ணாத்துரை அவர்கள் பேசி முடிந்தவுடன், கூட்டம் இரவு 7-30 மணிக்கு முடிவுற்றது.

மக்கள் மைதானத்தைச் சுற்றிலுமுள்ள ரோடுகளிலும், வீடுகளிலும், கடைகளிலும், பக்கத்திலுள்ள பூங்காவிலும் நெருங்கிக் குழுமியிருந்தனர். மக்கள் வசதியாகக் கேட்டு நுகரும்படி ஒலிபெருக்கும் குழாய்கள் ஏராளமாக அமைக்கப்பட்டிருந்தன. சென்னை மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் முறையிலும், ஊக்கப்படுத்தும் வகையிலும், தெளிவுபெறும் வழியிலும் இம் மாபெருங் கூட்டம் அமைந்திருந்ததானது "திராவிட முன்னேற்றக் கழகந்"தின் எதிர்கால ஆக்கத்திறகான அறிகுறியாகும்.

இக்கூட்டம் முழு வெற்றி பெறுவதற்கு முக்கியமாக முன்னின்று உழைத்து, அரும்பாடுபட்ட தோழர்கள் கே. எம். கண்ணபிரான், ஆர். பாண்டியன, எம். ஆர். பாண்டியன், டி. எம். பார்த்தசாரதி, கே. கோவிந்தசாமி, வி. டி. பெரியசாமி, கவுன்சிலர் வி. முனுசாமி, என். எம். சுப்பிரமணியம், சி. வி. ராஜன், மளிகை ரெங்கசாமி, குருசாமி, எஸ் பி. டி. திராவிடமணி ஆகியோர் முயற்சியும், மின்சார விளக்குகள் போட்டு அலங்கரித்த தோழர் வி. ஏ. கிருஷ்ணசாமி, ஒலிபெருக்கி மிகச் சிறப்பாக அமைத்துத்தந்த சென்னை முருகா சவுண்ட் சர்வீஸ் ஆகியோர் முயற்சியும் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

கூட்டத்திற்கு ஏராளமான தாய்மார்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி

கூட்டத்தை நல்லமுறையில் நடத்தித்தருமாறு என்னைக்கேட்டுக் கொண்டனர். நான் அல்ல அதைச் செய்யவேண்டியது. திராவிடப் பெருங்குடி மக்களாகிய நீங்கள் தான் அதற்குப் பெரிதும் துணை புரியவேண்டும்.

இக் கூட்டம் ஏன் கூட்டப்பட்டது? யாரையாவது மறுத்துப் பேசவா? என்றால் இல்லை. தமிழ் நாட்டின் பல ஜில்லாக்களிலிருந்தும் பல முக்கியஸ்தர்கள் வந்துள்ளனர். அவர்கள் யாவரும் பெரியாரைப் பின்பற்றியவர்கள். அவர்கள் யாவரும் பெரியாரின் திருமணத்தைக் கண்டித்தவர்கள். யாவரும் அவர் அந்த ஏற்பாட்டை விட்டுவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டவர்கள். எல்லோரும், அவரோடு ஒத்துழைத்தவர்கள் தான். அவர்கள் யாவரும்திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவதா? அல்லது வேறு புதிய கட்சி அமைப்பதா? என்று யாவரும் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வந்தனர். மிகவும் முக்கியமான முடிவுசெய்தனர். அதாவது, வேறு கட்சி, திராவிட முன்னேற்றக் கட்சியென்று ஆரம்பிப்பது என்ற முடிவுக்கு வந்தனர், ஏன்—என்றால் ஐயா அவர்கள் அவருடைய ஏற்பாட்டின்படி கழகப் பணத்தையும், தம்முடைய சொத்தையும் சேர்த்து டிரஸ்டு ஏற்படுத்தி வைப்பதாகச் சொல்லுகிறாரே அப்படியேசெய்யட்டும். அதுவும், திராவிடப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படட்டும் என்று, திராவிடர் கழகத்தை அவருக்கே விட்டு விடுவோம் என்று விட்டு விட்டோம். அதோடு, அதைக் கைப்பற்றி அவரோடு போட்டி போட்டுக்காலத்தைக் கழிப்பதைவிட, வேறு கட்சியையே ஆரம்பித்து நம்முடைய போக்கில் வேலை செய்வது—அதாவது, பெரியார் வகுத்த கொள்கைப் படியே கழகத்தை நடத்துவது என்று தீர்மானித்தார்கள். இதனால், பெரியாருககும் நமக்குமோ, அல்லது திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே, தகராறோ, பூசலோ கிடையாது என்று தெரிவிக்கிறேன். அது ஐயா தலைமையிலேவேலைசெய்யும். இதுவும், தனித்திருந்து வேலை செய்யும். மோத வேண்டிய வேலையே கிடையாது. எக் காரணம் கொண்டும் திராவிடர் கழகத்தைத் தாக்க வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. ஆகவே சம தர்மம், சமுதாய சீர்திருத்தம், புது அறிவு வளர்த்தல், திராவிட நாட்டுப் பிரிவினை என்ற முக்கியக் கொள்கைகளையே அடிப்படையாகக்கொண்டு தான், நமது திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப் பட்டுள்ளது. அதற்கு, உங்கள் முழு ஆதரவையும் கொடுங்கள் என்று வேண்டுகிறேன்.

சேலம் அ. சித்தையன்

திராவிட மக்களாகிய நாம், இவ்விதம் பெருங்கூட்டமாகக் கூடிப் பல மாதங்களாகிவிட்டன. நீண்ட நாட்கள் கழித்து மீண்டும் கூடுகின்றோம். இடைக்காலத்திலே, நாட்டிலே பலப்பல நிகழ்ச்சிகள் நடந்தன. கழகம் மூன்று மாதங்களாகச் செயலற்றுக்கிடந்தது. நாம் இன்று கூடியிருக்கிறோம், வேதனையோடு தான். இனி வேலையின்றி வாளாவிருக்க முடியாது; மந்த நிலையை மாற்றித்தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எந்த லட்சியத்திற்காகத் திராவிடர்கழகம் பாடுபட்டதோ, உழைத்து வந்ததோ, அதே லட்சியத்திற்காகவே தான் திராவிட முன்னேறறக கழகமும் பாடுபடுகிறது, பாடுபடப்போகிறது என்று உறுதி கூற ஆசைப்படுகிறேன். வடநாட்டு ஏகாதிபத்தியத்திலிருந்தும் விடுபட வேண்டும், நாட்டு மக்களிடையே பேதா பேதம் எந்த உருவிலும் இருக்கக் கூடாது, என்ற கொள்கைதான் நமக்கும். நாம பிரிந்தோம, தலைமையினின்று— கொள்கையிலிருந்து அல்ல. பிரிந்தோம், தலைவரிடம் கொண்ட மனத்தாங்கல்காரணமாக. தலைமை, தன் போக்கை, கருத்தை மாற்ற வேண்டும் என்று எதிர்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

மாலை மணி

சென்னை 19—9—49 திங்கட்கிழமை

மலர்ச்சியும் - மகிழ்ச்சியும்

சென்ற மூன்று மாத காலம்—கழகத் தோழர்களிடையே காரிருட் படலம்! அந்தக் காரிருள் இப்பொழுது நீங்கிவிட்டது—நீக்கப்பட்டுவிட்டது—புதிய ஒளி பிறந்துவிட்டது!

கழகம் புது மலர்ச்சி பெற்றுவிட்டது—புது மணத்தோடு பிறந்துவிட்டது! புது மலர்ச்சி, கவலை கப்பிய உள்ளத்தோடு காட்சியளித்த கழகத் தோழர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

"திராவிடர் கழகம்" என்ற அமைப்பிலே இருந்த பலரும், "திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற புது அமைப்பிலே பங்கு கொண்டு பாடுபட முனைந்துவிட்டனர். அமைப்பிலே முன்னேற்றம் அமைந்துள்ளது—புது மணம் வீசுவதன் அறிகுறி!

பூத்துள்ள புதிய மலர் பழைய வகையைச் சேர்ந்தது தான்—ஆனால், புதிய பல வண்ணங்களோடு—நறுமணத்தோடு தோற்றம் அளிக்கிறது. பழைய மலரிலுள்ள சர்வாதிகார நாற்றம் இதில் இல்லை—இருக்க வழியில்லை—ஜனநாயக மணந்தான் இதில் கமழ்கிறது.

திராவிடர் கழகத் தலைவர் பெரியாரின் பொருந்தாத் திருமணமும்—அதற்கு அவர் கூறிய பொருந்தாக் காரணங்களும், கழகத்திலே தொடர்பு பூண்டு பணியாற்றி வந்த பலரையும் செயலற்றவர்களாக ஆக்கி விட்டன. சென்ற மூன்று மாத காலமாக, என்பதை யாவரும் நன்கு அறிவர். கொள்கையில் முரண்பாடு—குறிக்கோளில் அழிவு—ஜனநாயக முறையில் கேடு—கட்சியில் எதேச்சதிகாரம் ஆகிய இவை பலவும், தலைவரின் தகாத சொல்லிலும்—செயலிலும் காணப் பட்டதால், அவர் தலைமையின் கீழ் இருந்து பணியாற்று வதற்கில்லை என்ற வெறுப்புணர்ச்சியை, பெரும்பாலான கழகத் தோழர்களும், பெருவாரியான கிளைக் கழகங்களும் தலைவரிடத்தில் தெரிவித்துக் கொண்டார்கள்.

பெரியாரின் தலைமையை ஆதரித்தவர் சிலர்-தலைமையில் நம்பிக்கைக் கொள்ளாதவர்கள் பலர். ஆதரித்தக் கிளைக் கழகங்கள் சில-எதிர்த்தக் கிளைக் கழகங்கள் பல. ஜனநாயக அமைப்பு முறையில் நம்பிக்கையும், நாணயம்-பொறுப்பு-நேர்மை-நீதி ஆகியவற்றில் பற்றுதலும் உள்ளபடியே தலைவரிடத்தில் இருந்திருந்தால் கழகத் தலைமையை விட்டு விலகியிருப்பார். அப்படிக்கில்லாமல் "ஒரு மனிதன் தேவைக்கே இயக்கம்" என்ற முறையில் தலைவர் காரியமாற்றுகிறார், என்பதைக் கண்ட பிறகு, கழகப் பணியினின்றும் விலகி நின்றோர் அனைவரும் கண்ணியமான வழியைத் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் முடிவே "திராவிட முன்னேற்றக் கழகத்"தின் தோற்றம்.

கழகத் தலைவரை முறைப்படி நீக்கிவிட விலகி நிற்போருக்கு ஆற்றல் உண்டு—அந்த முறையைக் கையாளுவதால் அழிவு வேலை தான் ஆரம்பகாலத்தில் நடைபெறும்—ஆக்கவேலை நடைபெற இடமேற்படாது—மக்களிடையே குழப்பம் ஏற்படும்—அடக்குமுறை அரசாங்கத்திற்குக் கொண்டாட்டம் ஏற்படும்—இவ்வளவுக்கும் அப்பால் கழகத்தைக் கைப்பற்றுதல் மூலம் மோதுதலில் வெற்றி பெற்றோம் என்ற பெருமைதான் ஏற்படும். உருவில்லாத—பலன் தராத—கவைக்குதவாத அந்த வெற்றிக்காகக், கழகத் தோழர்களின் நேரமும்-நினைப்பும் உழைப்பும்-அறிவும்-ஆற்றலும் பாழ்படுத்தப்படாமல், அவை நாட்டிற்கும் மக்களுக்கும் பயன்படவேண்டும் என்ற நல்லெண்ணத்தின்—கண்ணியத்தின்—பெருந்தன்மையின்-விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையின் அறிகுறியே "திராவிட முன்னேற்றக் கழகத்" தோற்றமாகும்.

தனிக் கழகம்-பெரியார் தலைமையை விரும்பாதோர் வேலை செய்ய, பரப்பிய கொள்கையைத் தொடர்ந்து பரப்ப, குழப்ப நிலையைப் போக்க. மோதுதலைத் தவிர்க்கவே யாகும். கொள்கை பெரிது—லேபில் அல்ல!

நாம் இதுவரையில் பரப்பிய கொள்கைகளாகிய,

அரசியல் துறையில், திராவிட நாட்டில் வடநாட்டு அல்லது வேறு எந்நாட்டு ஏகாதிபத்ய ஆட்சியும் இல்லாமல் செய்து தனியாட்சியுடைய நாடாக ஆக்குவது,

பொருளாதாரத் துறையில், சமதர்ம நிலையை உண்டாக்குதல்,

சமுதாயத் துறையில், பேதமற்ற மனித சமுதாயத்தை அமைத்தல்,

இந்த மூன்றையும் குறிக்கோள்களாகக் கொண்டு பாடுபடவே "திராவிட முன்னேற்றக் கழகம்" உருவாகி முன்னிற்கிறது.

அரசியல் ஆட்சியைக் கைப்பற்றுதல் போன்ற உடனடிப் பிரச்சினை இந்த முன்னேற்றக் கழகத்துக்குக் கிடையாது.

அரசியல்-பொருளியல்-சமுதாய இயல் ஆகிய மூன்று துறை பற்றிய கருத்துக்களை மக்கள் முன் வைத்து, அவர்களை நாட்டிற் கேற்ற நலன் மக்களாக ஆக்கும் அறிவுரைப் பிரச்சாரத்தை உடனடி வேலையாகக் கொண்டே கழகம் தோன்றியிருக்கிறது.

மாகாண மாநாடு கூடுவதற்குள், கழகத்தை அமைப்பு-ஒழுங்கு-முறையுள்ள ஒரு ஜனநாயகக் கழகமாக உருவாக்கப் பல உறுப்பினர்கள் கொண்ட தற்காலிகப் பொதுக் குழுவும் அதிலிருந்து அமைப்புக் குழு, பிரசாரக்குழு, அமைப்புத்திட்டக்குழு, நிதிக்குழு, ஆகியவை நியமிக்கப்பட்டிருக்கின்றன. இனிச் செயல்கள் தொடர்ந்து நடைபெறும். ஆகவே கழகத் தோழர்கள் ஊக்கமும், உணர்ச்சியும் கொண்டு, மலர்ச்சியும், மகிழ்ச்சியும் பெற்றுத் தொண்டாற்றி நாட்டுப்பணியினை நல்ல முறையில் ஆற்றிவைப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

ஆதிதிராவிடர்களை ஒதுக்குவதா?

அதற்கு அரசாங்கம் ஆதரவு காட்டுவதா?

தீண்டாமையை இந்த நாட்டை விட்டுத் தொலைத்துவிட்டோம் என்று காங்கிரஸ்காரர்கள் முழக்கமிட்டுத் திரிவது எவரும் அறிந்த உண்மையே. ஆனால் உண்மையில் தீண்டாமை ஒழிக்கப்பட்டதா தாவெனின் அதுதான் இல்லை.

இன்னும் அவர்களை ஒதுக்கி யொதுக்கி, தீண்டாமையை நிலைபெறச் செய்யும் வேலைதான் நடைபெற்று வருகிறதென்றால், இதில் வியப்புறுவதற்கில்லை.

"ஆதிதிராவிட மாணவர்களுக்கென்று தனிப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படும். பகல் உணவு இலவசமாகத் தரப்படுவது தொடர்ந்து நடக்கும். இவ்வகையாகத் தீண்டப்படாத மக்கள் கல்வி பெற அரசாங்கம் வழி செய்யும்".

என்று சென்னை அரசாங்கத்தார் அறிவித்திருப்பதிலிருந்து, அறிவுடை எவரும் அரசாங்கத்தின் போக்கில் அவநம்பிக்கை கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.

தீண்டாமை ஒழியவேண்டுமென்றால், தீண்டப்படாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மக்கள் பிற சாதி மக்களுடன் தாராளமாகப் பழக வசதிகள் செய்துதர வேண்டும். ஆதிதிராவிடப் பிள்ளைகளுக்காக அரசாங்கம் பண உதவிசெய்து, எந்தப் பள்ளிக்கூடமாயினும் சரி, அவைகளில் ஆதிதிராவிடப் பிள்ளைகளும் சேர்ந்து படிக்குமாறு செய்ய வேண்டும். இதனால் எல்லாக் குலமக்களும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகவும், தீண்டாமை என்பது அநாசாரத் திட்டம் என உணர்ந்து சமத்துவ எண்ணத்தை அனைவர் மனத்திலும் பதிய வைக்கவும் ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

இதைவிட்டு ஆதிதிராவிடர்களைத் தனிப் பள்ளிக்கூடத்தில் ஒதுக்கி வைத்து, ஒதுக்கும் குணத்தை வளர்த்துக்கொண்டுவர, அரசாங்கமே இடந்தருவதாயிருந்தால் இதனை என்னென்பது?

எனவே, சென்னை அரசாங்கம் நன்கு யோசித்து, ஆதிதிராவிடப் பிள்ளைகளை இன்னும் ஒதுக்கி வைத்தே நடத்தவேதென்னும் எண்ணத்தைக் கைவிட்டு, ஆதிதிராவிடப் பிள்ளைகளை எல்லாப் பள்ளிகளிலும் சேர்த்து, சமத்துவக் கருத்து அனைவர் மனத்திலும் ஆழப்பதியுமாறு செய்ய முன்வர வேண்டுகிறோம்.

நாட்டு மக்களுக்கு வேண்டியது மோட்டார் வண்டியா?

இந்தியாவில் ஒரு கோடி ரூபாய் செலவில் மோட்டார் வண்டி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று அமைக்க ஓர் அன்னியக் கம்பெனிக்கு அனுமதி அளிக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்து விட்டதாக அறியக்கிடக்கிறது.

நாட்டிலே உணவு, உடை, உறையுள் பஞ்சம் தலை விரித்தாடிக் கிடக்கும் இந்தக் காலத்தில், மோட்டார் வண்டிகளை உற்பத்திச் செய்யும் வேலைக்கு இங்கு என்ன தேவை ஏற்பட்டுவிட்டதோ தெரியவில்லை.

நாட்டிலே பயிர்த்தொழிலை விஞ்ஞான ரீதியில் செய்ய, தரிசு நிலங்களை இயந்திரங்கள் மூலம் பயிரிட, மின்சாரத்தைப் பெருக்கிக் கிராமங்களனைத்திலும் பரப்ப, மக்களுடைய இன்றியமையாத அன்றாடத் தேவைக்குரிய பொருள்களை உற்பத்தி செய்ய முன்வரும் கம்பெனிகளுக்கு அனுமதியளித்து, அத்தகைய கம்பெனிகளை இங்கு ஏற்படச் செய்தால், இந்நாடும் பலனடையும்; நாட்டை ஆளும் கூட்டத்தாரும் நாட்டிற்கு உருப்படியான நன்மையைச்செய்தவர்களாவார்கள் அதைவிட்டு மோட்டார்வண்டி உற்பத்திக்கு அரசாங்கம் ஆதரவு காட்டுவதென்பது, ஏழை தன் இரத்தம் வியர்வைத் தண்ணீராகச் சொட்டி, இரத்தம் சுண்ட அவர்கள் உழைத்துக் கொண்டு இடக்கையில், பணக்காரர்கள் அத்தனை [illegible] விளக்கேற்றி உல்லாசவாழ்வு வாழ்ந்து வரும் நிலைமையை நிலைநாட்டுவதாகத் தானிருக்கிறது.

பாரதி விழா புகழேந்திக் கழகத்தில்

சென்னை, செப் 16—

சென்னை, எழும்பூர் புகழேந்திக் கழகத்தின் சார்பாக, அம்ப்ரோவியா கல்லூரியில் பாரதி படத் திறப்புவிழா நடைபெற்றது. திரு. எஸ். சோமசுந்தரம் M.A.B.T. தலைமைதாங்கி, பாரதியாரின் உயர் பண்புகளை எடுத்து விளக்கினார். அப்துல் ஹக்கீம் உயர் நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் புலவர். பு. செல்வராஜ். பாரதியாரின் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்து விளக்கி, மாணவர்கள் பலதெய்வ நம்பிக்கைகளையும், மத வெறிகளையும் விட்டொழித்து, முயற்சியில் பெருநம்பிக்கைவைத்து, எல்லோரும் இந்நாட்டுமன்னர் எனும் மனப்பான்மையுண்டு, உயர்வு தாழ்வுகளை வெறுத்து, சமத்துவப்பண்பும், ஆண்மையே ஒருமைப்பாடும் கொண்டு, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் எனும் மூலக் கொள்கையை மனத்தில் பதிய வைத்து, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பரந்த நோக்கத்துடன் பணியாற்ற வேண்டுமென்றும், அச்சந்தவிர்த்து, ஆண்மைபெற்று, திமிர்ந்துநின்று, கல்வியில் வெற்றி கண்டு முன்னேற்றப்பாதை நோக்கி வெற்றி வீரர்களாய்ச் செல்ல வேண்டுமென்றும், இப்பண்பினையே பாரதியார் நம்மவரிடைக் காணவிழைந்தாரென்றும் பாரதி விழா, மாணவர்களை இக்கருமுறையில் ஊக்குவிக்குமென நம்புவதாகவும் கூறி, பாரதியாரின் படத்தைத் திறந்து வைத்தார். புலவர் சீத்தாராமன் சிறிது பேசிய பின், பன்மொழிப் புலவர் திரு. K. அப்பாதுரை M.A.L.T. அவர்கள். பிற நாட்டுப் புலவர்கள் நிலையுடன் பாரதியாரின் நிலையை ஒப்பிட்டு, கருத்துப் பொதிந்ததோர் அரிய சொற்பெருக் காற்றினார்.

கழக அமைச்சர் திரு. மா. ரா. இளங்கோவன் நன்றிகூற, விழா முடிந்தது.

பூனைகள் பிணக்கில் மந்திரியின் மத்தியஸ்தம்!

வேற்றுமையை மறந்து ஒன்றுபட்டு நிற்போம்!

சென்னை நகரம் யாருக்கு?

பூனைகள் இரண்டு ஓர் அப்பத்துக்காகப் போரிட்டுக் குரங்கினிடம் தீர்ப்புக் கோர, அக்குரங்கு பூனைகளின் அப்பத்தையே தின்று ஏமாற்றிவிட்டதைப் போல, சென்னை நகரம் யாருக்குச் சொந்தம் என்னும் விஷயத்தில் ஆந்திரர்கள் கிளப்பிய வீண் கூச்சல் காரணமாக, சென்னை நகருக்குரிய தமிழர்களுக்கும் அது உரியதாகாமல், ஆந்திரர்களுக்கும் உரியதாகாமல், வடநாட்டவர்கள், சென்னை நகரத்தையும் அதனைச்சுற்றி 25 மைல் தொலைவு வட்டப் பிரதேசத்தையும், தனி மாகாணமாக்கி வைத்து விடுவதென்று திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

சென்னை நகரம் தமிழர்களுடையதே என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் பல எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆந்திரர்கள் சென்னை தங்களுடையது எனக் கோரினர் என்ற காரணத்தால், தமிழர்களிடமிருந்து, அவர்களுக்குச் சொந்தமான நகரத்தை வடநாட்டரசாங்கம் பறித்துக் கொள்ள முயலுமானால், இது பெரிதும் கண்டிக்கப்பட வேண்டியதாவதுடன் இவ்வனம் நடக்கும் வடநாட்டவர் விஷயத்தில் சென்னை மாகாணத்தவர் எப்படி நம்பிக்கை வைத்து வாழமுடியும் என்று கேட்கின்றோம்.

சென்னையை ஆந்திரர்களுக்கும், தமிழர்களுக்குமாகச் சமபங்குடையதாக்கிக் கொடுத்துவிடுவதென்றும் ஒரு கருத்து வடநாட்டில் உலவுவதாகத் தெரிகிறது. சென்னையை இவ்வண்ணம் பங்கு போடப்பார்ப்பது இன்னும் கொடிய செயலாகும்.

சென்னை ஒருபகுதியை ஆந்திரர்கள் கேட்க, அதனையும் அதனைச் சுற்றி 25 மைல் சுற்றளவுள்ள இடத்தையும் ஆந்திரர் செல்வாக்கிற் பறித்து வடவர் எண்ணினால், இது பெருந் தவறாகப் போய் முடியும்.

சென்னைநகரம் எப்படிப் பார்த்தாலும் தமிழர்களுடைய தனி நகரமேயாகும். அதனை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்வதோ, பங்கு போட்டுக்கொடுக்க முன்வருவதோ பெருங்குற்றமாகும் என்பதை வடவர் உணர வேண்டுகிறோம்.

மோதுதலை நீக்குவோம் - முன்னேறிச் செல்வோம்

பார்த்தோம். ஆனல் எமாந்தோம். வேண்டினேம; ஆனல் வெறுத்து ஒதுக்கப்பட்டு விட்டோம். நாம பெரும்பான்மையினர். ஆனாலும், நாம் அவருடனே வீணை மோதுதல் வேண்டாம் என்று தீர்மானித்தோம. எனவே, திராவிடக் கழக மத்திய நிர்வாகக் கமிட்டியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒன்றுகூடி, வேறு ஓர் அமைப்பை எற்படுத்திக்கொண்டோம திராவிட முன்னேற்றக் கழகம் என்று. திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகத்தைத் தாக்கும் என்ற தப்பு எண்ணம் கொள்ளும் மாற்றுக் கட்சியினரும் அரசாங்கத்தாரும் அறிந்து கொள்ளவேண்டும்—திராவிட முன்னேற்றக் கழகம, யாரையும் தாக்காது, என்பதை மனதில்

ஜி. பி. சோமசுந்தரம், பேளுக்குறிச்சி.

எஸ். முத்து மதுரை.

கே. கோவிந்தசாமி, சென்னை.

சி. முனுசாமி, விருத்தாசலம.

தனி மனிதன் தேவைக்கல்ல கட்சி!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்ததை, வேதனையைக் கொட்டிவிட்டோம் இது வரையில். இனியும், பழைய குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கவேண்டிய நிர்ப்பந்த நிலையிலோநாம் இல்லை. பழைய அத்தியாயம் முடிந்து இன்று புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. பெரியாரைத் தாக்கவோ—திராவிடக் கழகத்தைத் தூற்றவோ நாங்கள் இல்லை. அது வீண்வேலை. அதை விட்டொழித்து விட்டோம் அவருக்கே!

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு முற்போக்குத் துறையில் வேலை செய்யும். அதுவேற்றுத்தான்பிறந்தகுழந்தையென்றாலும் அதன் கொளகைகள, நாட்டுக்குத் தேவையானவை என்பது மட்டுமல்ல; மிகப் பெரும்பாலோரால் போற்றப் படுவது; இன்று மிகவும் தேவைப் படுவது. பேதம், பிளவு, பகை முதலிய உணர்ச்சிகளை ஒழியுங்கள். ஒருமித்து நமது முன்னேற்றக் கழகத்தை உங்கள் முழுமூச்சுடன்—முழு மனதுடன் ஆதரிக்கும்படி வேண்டுகிறேன்.

என். வி. நடராசன்

இந்த நாள் நமது சரித்திரத்திலேயே மிகவும் புரட்சிகரமான நாள். இப்படிக் கூறுகிறேன் என்பதால் வெற்றிக் களிப்போடு பேசுவதாக எண்ணிவிடவேண்டாம். வெற்றிக் களிப்பு இல்லை. ஒருவகையில் வேதனையோடுதான் பேசுகிறேன். இன்று நமக்குள்ள பொறுப்பு மிக மிக அதிகம.

பெரியார், திருமணம என்ற போல்ஒருஎற்பாடுசெய்து கொண்டது நமது கருத்துக்கு, அவரே நம்மிடை கூறி வந்த முற்போக்குக் கொள்கைகளுக்குப் புறம்பானது என்று கூறி அவரைக்கண்டித்தோம. அவர் போக்கு மாறும் என எதிர் பார்த்தோம்; பலனில்லை. எனவே பிடிக்காத தலைவரிடமிருந்து, நாம் பிரிந்து விட்டோம், தனிக்குடித்தனம் ஆரம்பித்திருக்கிறோம. இன்று நம்மிடையே பொருள் இல்லாதிருக்கலாம். ஆனல் நமமை நாட்டிலுள்ள 250 கிளைக்கழகங்களும, 46 நிர்வாக உறுப்பினரில் 32 பேரும ஆதரிக்கின்றனா. இத்தனை பேரும, அவரைக் கண்டித்தும, அவர்தம் போக்கிலேயே சென்றதால நாம அவர் தலைமையை ஒதுக்கி, வெறுத்து விட்டு வேறு அமைப்பை எற்படுத்திக் கொண்டோம். அவரோடுமோதுதல்பெரிதா-கொள்கை பெரிதா என்று சிந்தித்து, கொள்கையே பெரிது, மோதுதல் வேண்டாம் என்று பெருந்தன்மையோடு நடந்து கொண்டோம. ஒன்றும் முடியாமல் விட்டு விட்டார்கள் திராவிடர் கழகத்தைக் கைப் பற்றாமல் என்று சிலர் கேலி செய்வர். இந்தக் கேலி, கிண்டல் எல்லாம் இரண்டு நாளைக்குத்தான் இருக்கும, செல்லும. ஆனல் மோதுதல் என்ற நிலை எறபட்டால் அது பல தொல்லைகளை எற்படுத்தும்; குறிப்பாக மாற்றுக் கட்சியினருக்கும, அரசாங்கத்திற்கும் நமது கொள்கைகளைத் தடுக்க, அடக்க இடம் கொடுத்தவர்கள் ஆவோம் என்று தீர்மானித்தே இந்த முடிவு செய்தோம.

இந்தப் புரட்சிகரமான நாளில் நாமெல்லாம் ஒரு உறுதி கொள்ள வேண்டும்; சபதம்செய்து கொள்ள வேண்டும. அதாவது மனமாச்சரியம் யாவையும் விட்டொழித்துச் செயலாற்றுவோம்—தளபதி அண்ணாவின் வழி நின்று பணியாற்றுவோம்— தூய்மையான உழைப்பைக்கொண்டு செயலாற்றுவோம். திராவிட சம தர்ம ஆட்சியை நிறுவியே தீருவோம் என்ற உறுதியை கொள்ளுங்கள் என்று வேண்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான ஆக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபடுங்கள். நமக்குக் கொள்கையே பெரிது. தனிப்பட்ட செல்வாக்குச் சக்தி அல்ல. இன்று நமக்கும், பெரியார் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம், ஜனநாயகத்துக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் உள்ள போராட்டமேயாகும். தனிப்பட்ட விருப்பு அல்லது வெறுப்பு அன்று.

ஈ. வி. கே. சம்பத்

இன்றிலிருந்து புது வாழ்வு தொடங்குகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. புனிதமான, அறிவுக் கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் பணியைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்துவிட்டோம். புது வாழ்வு தொடங்கிவிட்டோம்.

திராவிடர் கழகத்தை விட்டுவிடுவதா கைப்பற்றாமல்? என்ற எண்ணம் பலருக்குத் தோன்றத்தான் செய்தது. மிகச்சிலர் அவர்கள், நாமோ மிகப்பலர். ஏன் விடவேண்டும் என்று தான் எண்ணினர். நானும் கூட அவ்விதம் தான் எண்ணினேன். மனக்கிலேசமடைந்தேன். பிறகுதான் உணர்ந்தோம்; அது நல்லதல்ல நாம் பெருந்தன்மையோடு விலகுவோம், வேறு கழகம் அமைப்போம், என்ற அண்ணாவின் போக்கு, கொள்கை யாவருக்கும் பிடித்தது.

திராவிடக் கழகம் என்ற நாமகரணமே சேலத்தில் அண்ணாவால் சூட்டப்பட்டது தானே! அதுமட்டுமல்ல நாம் இருந்ததால் தானே அதற்குப் பெயர், புகழ் வந்தது. நமது உழைப்புத்தானே கழகம். அந்த "லேபில்" வேண்டாம் நமக்கு. நாம் புது லேபில் வைத்துக் கொண்டு வேலை செய்வோம், பெருந்தன்மையோடு. லேபில் அல்ல முக்கியம். "லேபில்" எதுவானால் என்ன? வேலைதான் முக்கியம். நம்மிடம் தகுதி, திறமை, உழைப்பு, உணர்ச்சி, ஊக்கம் இருக்கிறது. உழைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடர்ந்து நடத்துவோம்; நாட்டிற்குத் தேவையான நற்பணி புரிவோம். புதுபலம், புது கூட்டுறவு பெற்றுள்ள நாம், புது முறுக்குடன் வேலையைத் தொடர்ந்து நடத்துவோம்.

திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமண்யம்

நானும், பெத்தாம்பாளையமும் கோவை மாநாட்டுக்கு, வரவேற்புத் தலைவர்களாக இருந்து நடத்தினேம். அதில்தான் பெரியார் இயக்கத்திற்கு வாரசு எற்படுத்துவதாகச் சொன்னர். பிறகு திருமண எற்பாட்டைத்தெரிவித்தார். நாம் யாவரும் கொள்கைக்கே முரண்பாடு என்று கூறினேம். கண்டித்தோம். ஆனல் அவர் செய்தது என்ன? அவரை இதுவரை பின்பற்றினவர்கள் மனம் புண்படும்படி அறிக்கைகள் விட்டார். தலைமைப் பதவியிலிருந்து விலகவுமில்லை. எனவே, நாம பெருந்தன்மையோடு விலகி திராவிட முன்னேற்றக்கழகத்தைத் துவக்கிச் சீர்திருத்தப் பணியைத் தொடர்ந்து நடத்துகிறோம். இதற்கு உங்கள் முழு ஆதரவையும் கொடுத்து உதவுங்கள்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பெரியாரைவிட்டு விலகினேம், பெருந்தன்மையோடு. நாம் பலராக இருந்தும விட்டுக்கொடுத்திருக்கிறோம், வேண்டாம் திராவிடக் கழகம் என்று. ஏன் வீண் பகை? மோதுதல் வேண்டாம், அவசியமில்லை, ஒரு லேபிலுக்காக. நம்மால் இலட்சியத்தைக் காக்க முடியும், கண்ணியமாக என்ற உறுதியிருக்கிறது.

நமக்குமுன்பலர் பிரிந்தனர் பெரியாரைவிட்டு. ஆனல், அவர்களுக்கும் நமக்கும் பலவித்தியாசங்கள்உண்டு. அவர்கள் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு அடிபணியாது கொள்கையை விட்டே வெளியேறினர். இலட்சிய உணர்ச்சியில்லை; கட்டுப்பாட்டையும் மதிக்கவில்லை அவர்கள். நாம் இலட்சிய உணர்ச்சி கொண்டவர்கள். கட்சியின் கொள்கையில் சிறு ஈடுபற்றுக் கொண்டவர்கள். கொள்கைக்காகப் போரிட்டுக் கொள்கைக்காகவே கட்டுப்பாடாக விலகிக் கண்ணியமாகப் புதிய அமைப்பை ஏற்படுத்தி நடத்துகிறோம். மக்களிடம் மகத்தான வரவேற்பும் நமக்கு இருக்கிறது. இலட்சியப் பாதையைவிட்டு விலகவில்லை.

பணம் இல்லை நம்மிடம். பணம் தானு முக்கியம்? பணம்முக்கியமா? இலட்சியம் முக்கியமா? என்ற கேள்வி எழுந்தது. இலட்சியமே முக்கியம் என்ற முடிவுக்கு வந்து சேர்ந்தோம. இலட்சியப் பாதையில், திராவிடமுன்னேற்றக்கழகத்தின் மூலம் முன்னேறுவோம். அதற்கான முன்னணி வேலையை இராமநாதபுரம் மாவட்டத்தில் செய்யத் தயாராயிருக்கிறேன். (தொடரும்)

ச. வெ. அ. வள்ளிமுத்து, கோவில்பட்டி.

எஸ். ஆர். சுப்பிரமணியம், திருப்பூர்.

எஸ். நீதிமாணிக்கம், தூத்துக்குடி.

ராஜா சோழகர், குளித்தலை.

திராவிட முன்னேற்றக் கழகம்

துவக்கச் செலவுக்கான நன்கொடை

சி. என. அண்ணாதுரை	ரூ.	100
பி. பழனிச்சாமி	,,	100
கே. கே. நீலமேகம்	,,	100
செ ரா. சுப்பையா	,,	100
எம். பி. வடிவேல் (மூல்லைக்கொம்மை)	,,	101
ச. வெ. அ. வள்ளிமுத்து	,,	100
ப. உ. சண்முகம்	,,	100
என். எஸ். இளங்கோ	,,	100
டபிள்யு. கே. தேவராசன்	,,	100
எஸ். நீதிமாணிக்கம்	,,	50
ராம. சுப்பையா	,,	50
டி. ஆவுடையப்பன்	,,	25
சி. பஞ்சாட்சரம்	,,	25
ரா. சௌரிராஜன்	,,	25
ஆகமொத்தம்	ரூ.	1076

நன்கொடை அனுப்பும் தோழர்கள்:—

உரிமையாளர்,
"மாலை மணி"
2/45, முத்துமாரி செட்டித்தெரு சென்னை-1.

என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்.

பேதமற்ற வாழ்வே பாரதி கண்ட கனவு

நாடு நலமுற புரட்சிக் கவிகள் வேண்டும்

சென்னை, செப். 15.— சென்னை சட்டக்கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக "பாரதி விழா" நேற்றுமாலை கல்லூரிக் கட்டிடத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

விழா மாலை 4 மணிக்கு துவக்கப்பட்டது. மாணவர் தலைவர் தோழர் சண்முக சுந்தரம் தலைமை வகித்தார்.

தலைவரின் முன்னுரைப் பேச்சுக்குப்பின், தோழர் கா. அப்பாத்துரை எம். ஏ., எல். டி., அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் பேசும் போது, பாரதிபோன்ற புரட்சிக் கவிகளின் நினைவு விழாக்கள், சட்டக்கல்லூரி மாணவர்களிடையே நிகழப் பெறுதல், மகிழ்ச்சிக் குரியதொரு செயலென்றும்; பாரதி சிறந்த தேசியக்கவியென்றும், தேசியக் கவியென்றால், தன் காலத்திலே காணப்படும் கருத்துக்களைப் பாடித்தனக்கு ஒரு அழியா புகழைத்தேடிக்கொள்பவர்கள் என்றும், பாரதி வளர்த்த தேசியம் ஒரு பரம்பரையாகத் தோன்றி விட்டது என்றும், சாதிவேற்றுமைகளை ஒழித்து பேதமற்ற சமுதாய வாழ்வைக் காண அவர் பெரிதும் விரும்பி வாழ்ந்தார் என்றும், அன்றாட நிகழ்ச்சிகளையெல்லாம் பாட்டிலே அமைத்து, மக்கள உள்ளத்தைக் கவரும் அரிய ஆற்றல் அவர்பால் அமைந்து கிடந்தது என்றும் விரிவாக எடுத்துக் கூறி, பாரதியாரின் பண்பியல்புகளை விளக்கிக் காட்டினார்கள்.

அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவர், பாரதி தமிழிலக்கிய உலகிலே ஒரு மறு மலர்ச்சியின் சின்னம் என்றும், பழைய மனப் போக்கைமாற்றிபுதியதொரு நிலைமையை உண்டாக்கிய முதல் புரட்சிப் புலவன் பாரதியார்தான் என்றும், நூற்றாண்டு நூற்றாண்டாக மக்களுள்ளத்திலே படிந்து மக்களுக்கு மூட நம்பிக்கையையும், குருட்டுப் பழக்க வழக்கத்தையும், ஊட்டி வந்த மன மாசுகளைப் போக்கி வீர உணர்ச்சியைக் கொடுத்து மக்களை நிமிர்ந்துநடக்கச் செய்தவர் என்றும, பாரதியாரின் முதல்—முக்கியமான சீடராகிய பாரதிதாசனைக் கொண்டுதான் பாரதியாரின் பெருமையை நாம் அளவிடுகிறோம் என்றும், மக்கள் எஃகு நரம்பும், எண கழுத்தும் கொண்டு நிமிர்ந்து நடக்க பாரதியாரின் பாடல்கள் ஏற்ற மருந்தாக இருக்கின்றன வென்றும் கூறி, பாரதியார் சொல்லியது போல் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய வேண்டுமானால், வேண்டாத இந்தியை விரட்டியடித்துவிட்டுப் பயன்தரும் ஆங்கிலத்தையும், தாய்மொழித் தமிழையும் மட்டுமே கொண்டு அவற்றிற்கு நாம் நேரம், நினைப்பு, உழைப்பைச் செலவழிக்க வேண்டும் என்றும் விளக்கி விரிவானதோர் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரை பகர, செயலாளர் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிவுற்றது. மாணவர்களேயன்றி ஏராளமானப் பொது மக்களும் வந்து குழுமியிருந்தனர்.

பிறப்பு

18—9—49 பழனி நகர திராவிடர் கழக துணை-செயலாளர் தோழர் கா. வெங்கடாசலம் அவர்களின் துணைவியாருக்கு ஆண் குழந்தை பிறந்து, அதற்கு "பாண்டியன்" என்று பெயரிட்டதின் நினைவாக 'மாலைமணி' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம், மகிழ்ச்சி!

சேயாறு உயர்நிலைப் பள்ளியில்

தோழர் க. அன்பழகன் அறிவுரை

திருவத்திபுரம், செப். 10— 5-9-49 திங்கள் மாலை 2-30 மணிக்கு சேயாறு உயர்நிலைப்பள்ளி மாணவர் மன்றத்தின் சார்பில், பச்சையப்பன் கல்லூரி, தமிழ்ப் பேராசிரியர், திரு. க. அன்பழகன் எம். ஏ., அவர்கள், 'மக்கள் ஆட்சியும், மாணவர்களும்' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கூட்டத்திற்கு தலைமை ஆசிரியர், திரு N. M. வடிவேலு B. A. L. T. அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தோழர் அன்பழகன் அவர்கள் பேசுகையில், இன்றுள்ள 'ஆட்சி'யின் போக்கை விளக்கியும், அதில் இன்றய மாணவர்களுக்கு நாளை ஏற்பட இருக்கும் பங்கை எடுத்துக் காட்டியும், அதற்கான பயிற்சியை இன்றே பெறுவதற்கு மாணவர் மன்றங்கள், எவ்வாறு பணிபுரிய வேண்டுமென்பது பற்றியும், விரிவாக அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தலைவர், தமது முடிவுரையில், சொற்பொழிவாளரின், கருத்துக்கள் நாட்டில் பரவினால்தான், மக்கள் ஆட்சி மாட்சியுறும் என்றும், தமது மாணவர்களுக்குத் தாம் அத்தகைய நோக்கத்தோடே பயிற்சியளிக்க முற்பட்டுள்ளதாகவும் கூறினார். நன்றி கூறியபின், கூட்டம் இனிது முடிவுற்றது.

திருவத்திபுரம் திருமணம்

திருவத்திபுரம், செப். 10— 5—9—49-திங்கள் காலை 8. மணிக்கு திரு K. சம்பந்தன் அவர்கட்கும், திருமதி கமலா அவர்கட்கும், திருந்திய முறையில் திருமணம் நடைபெற்றது. திருந்திய திருமணத்தின் அவசியத்தை விளக்கி, தோழர் புலவர் கோவிந்தன் B. O. L., அவர்கள் தலைமையில் ஒரு பாராட்டு கூட்டம நடைபெற்றது. அவ்வமயம், உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர், திரு N. M. வடிவேலு B. A. L. T., அவர்களும், அவ்வுயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் அவர்களும், திரு. இராசமாணிக்கம் அவர்களும், வாழ்த்துரை வழங்கியபின், தோழர் க. அன்பழகன் M. A. அவர்கள், சீர்திருத்தத்தின் அவசியத்தைக் குறித்தும், வாழ்க்கைச் சிக்கல்களைக் குறித்தும் விளக்கிப் பேசினார்கள். பின்னர், தலைவர் முடிவுரையுடனும், நன்றி கூறலுடனும், விழா இனிது முடிந்தது.

எம். ஈ. எஸ். தொழிலாளர் சங்கம்

கோவை, செப். 15— கோயமுத்தூர் G. E. S. ஆபீஸில் 14-9-49 மாலை 4 மணிக்கு தோழர் P. V. காசிமமம் தலைமையில் ஆவடித் தோழர்கள்—K. குப்புசாமி; R. ஜெயநாராயணன் தொழிலாளர் குறைகளை எடுத்துச் சொல்லி உடனடியாக ஓர் விசாரணைக் கமிட்டி ஏற்படுத்துமாறு சர்க்காரை வற்புறுத்தினர். கோவைத் தொழிலாளர்கள் பெருவாரியாக பங்கெடுத்துக் கொண்டனர். தோழர் R. C. சுப்பரமணியம் நன்றி கூறலுடன் கூட்டம் கலைந்தது எனத் தோழர் குப்புசாமி எழுதுகிறார்.

ஆசிரியருக்கு முடங்கல்

கைத்தறித் தொழிலாளர் அவதி

ஐயா!

சங்கரன்கோவில் தாலூகா முழுவதும உள்ள பத்தாயிரம் நெசவுத் தொழிலாளர்கட்கு (முதலாளிகள்) மாஸ்ட்டர் வீவர்கள் 14 சேலைகள் கொண்ட பொந்து கலர் பாவு 1-க்கு கொடுத்துவந்த ரூ. 30. முப்பது ரூபாய் கூலிக் மிக குறைவு என்றும, அதிகச சம்பளம் கோரி அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டு, இதன் பேரில் மதுரை தொழிலாளர் விசாரணைக் கோர்ட்டார் மூலம் விசாரணை ஏற்பட்டு, சென்ற சில மாதங்களாக விசாரணைகள நடைபெற்றன. விசாரணைக் கோர்ட்டாரின் தீர்ப்பு வெளிவருவதற்குமுன் தீர்ப்புவெளிவர இருக்கும் சமயத்தில், மாஸ்ட்டர் வீவர்கள் நெசவுத் தொழிலாளர்கட்குக் கொடுத்துவந்த முப்பது ரூபாய் கூலியை இப்போது எவ்வித முன் அறிவிப்பும் இல்லாது திடீரென்று ரூ. இருபத்தைந்தாகக் குறைத்துவிட்டார்கள். இந்தக் கூலிக் குறைவால் நெசவாளர்கள் தங்கள் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை நடத்த முடியாமல், பொருளாதார நெருக்கடியால், உணவுப் பொருள்களின் விலைவாசிகள் உயர்வால் பாதிக்கப்பட்டு பட்டினி பசியால் மிக அவதிப்படுகிறார்கள்.

முதலாளிகள் தறிகாரர்கட்கு நேர்மையான முறையில் பாவு-நூல், கூலி முதலியன கொடுப்பதாகவும் இல்லை, எனவே ஏழை நெசவாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அகப்பட்டும் ஜீவனத்திற்கு வகை, வழியின்றித் திகைத்து நிற்கிறார்கள். இந்த நெருக்கடியில் முதலாளிகள் தறிகாரர்கட்கு கொடுத்திருக்கும் பழைய கடன்களை வசூலிப்பதில் முதலாளிகள் கையாளும் முறைகள் மிக விசனிக்கத் தக்கதாக இருக்கிறது.

ஆகையால் சென்னை அரசியலார் இதில் உடனடியாக கவனம் செலுத்தி நெசவுத் தொழிலாளர்களின் இல்லங்களில் சென்று அவர்களின் நிலைமையை நேரில் கண்டறிந்து நெசவாளர்களின் விமோசனத்திற்கு ஆவன செய்ய வேண்டும்.

இங்ஙனம்
S. M. திருவுடையான்
சங்கரன்கோவில். 14-9-49

* * *

ஆர்க்காட்டில் மக்கள் படும் அவதி

ஆற்காட்டில் சகலவிதமான சௌகர்யங்களுடன் கூடிய பஸ் ஸ்டாண்ட் ஒன்று இருந்தும் ஆற்காடு வழியாக வேலூர், ஆரணி, மதறாஸ், வந்தவாசி, திண்டிவனம், அரக்கோணம் முதலிய இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் பஸ் ஸ்டாண்டிற்குள் வருவது கிடையாது. இம்மாதிரி நேர் வண்டிகளுக்கென பஸ் ஸ்டாண்டிற்கு அருகாமையிலேயே 27-6-49லிருந்து குறிப்பிட்ட 3 இடங்களை போலீஸார் பஸ் நிற்கும் இடங்களாக ஏற்படுத்தியுள்ளனர். ஆதலின் அந்தந்த குறிப்பிட்ட இடங்களிலேயே டை வண்டிகள் பிரயாணிகளை இறக்கி விடுவதும் ஏற்றிக்கொள்ளுவதுமான வேலையை நடாத்துகின்றன. இம்மாதிரி புதிதாக ஏற்படுத்தியிருக்கும் இடங்களில், பிரயாணிகள் தங்குவதற்குத் தகுந்த வசதிகளும் கிடையா. கடும வெய்யிலாயிருந்தாலும், காற்றுமழையாயிருந்தாலும அவ்விடத்திலேயே இருந்துகொண்டு அல்லல் பட வேண்டியிருக்கின்றது. இம்மாதிரி ஏற்பாடானது அன்னிய ஏகாதிபத்தியத்தார் நம்மை ஆண்ட அந்தக்காலத்தில் ஏற்பட்டதன்று. ஆனால் நம்மை நாமே ஆண்டுக்கொள்ளும் இந்தக் காலத்தில்தான் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏற்பாட்டின் படி குறிப்பாக ஒருவர் ஆற்காட்டிலிருந்து சென்னைக்குச் செல்லவேண்டுமாயின் ஆரணி — சென்னை வண்டி நிற்குமிடத்தில் காத்துக்கொண்டிருக்கையில் அந்த வண்டி வந்து அதில் இடமில்லை எனக் கூறிவிட்டால் அவ்விடத்திலிருந்து சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் இருக்கும் வேலூர்—சென்னை வண்டிகள் நிற்குமிடத்திற்கு வர வேண்டும். அங்கும் முன்னர் கிடைத்த பதிலே கிடைத்தால், மறுபடியும் பழைய இடத்திற்கே திரும்பி வந்து மற்றொருவண்டியை எதிர்பார்க்கவேண்டும். இவ்விதமாக ஒரு பிரயாணி தான்கொண்டு வரும் மூட்டை முடிச்சுகளுடனும், பெண்டு பிள்ளைகளுடனும் அவதிப்பட நேரிடுகின்றது.

இந் நிலையைக் குறித்து, ஆற்காடு பொது மக்களால் ஒரு மகசா தக்க அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டும், நாளது வரையில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆற்காடு ஊராண்மைக் கழகத்து (Arcot Panchayat Board)க்கு நாள் 1க்கு ரூ. 6-0-0 நட்டம் ஏற்பட்டும் அவர்களும் உடனடியான நடவடிக்கை ஏதும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஆகவே பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்று ஆட்சி மன்றத்தில் ஆட்சி புரியும் கனம் மந்திரிகளாவது பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களைத் தீர்க்க, உடனடியான நடவடிக்கை எடுத்து, இந்த புதுமுறையை நீக்கி, பழைய முறையையே ஏற்படுத்துவார்கள் என்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,
A. T. பாலசுந்தரம்.

உரிமையைப் பறித்துக் கொண்டே இருப்பதா ஊராள்வோர்!

சுதந்திரநாடு என்றபெயர் பொருந்துமா?

பாசீச வெறி அழிவதென்னாளோ?

அரசியல் நிர்ணய சபையிலே குறிப்பிட்ட சில நிபந்தனைகள் மீது ஒரு தனி மனிதனை விசாரணையில்லாமலே அரசாங்கம் காவலில வைக்கலாம் என நிறைவேற்றப்பட்டிருக்கும் விதியானது, காங்கிரஸ் கட்சியினர், வரப்போகும் பொதுத் தேர்தலில், ஏகபோகமாகத் தாங்களே வெற்றிபெற்று மீண்டும் பதவிகளைப் பற்றிக்கொண்டு அமர்ந்து கொள்ள வகுத்தத் திட்டமே எனப் பொதுமக்கள் ஐயுறவேண்டிய நிலைமையிலிருக்கிறது.

பொதுத்தேர்தல் வரும்போது எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் எவரும் வெளியில் இல்லாதபடி காவலில் அடைத்துவிட, இந்த விதி காங்கிரஸ் ஆளும் வர்க்கத்தினரால் நன்கு கையாளப்படக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர்.

இதுதான், சுதந்தரநாட்டில் வாழுவதாகக் கருதிக்கொண்டிருக்கும் மக்களிடையே தனி மனிதனுடைய சுதந்திரம் காக்கப்படும் அழகு!

இந்த விதியின்படி அரசாங்கத்தால் கைது செய்யப்படும் மனிதருக்கு, அவர் கைது செய்யப்பட்டதற்குரிய காரணத்தைக் கூடிய சீக்கிரம் தெரிவிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இந்தக் "கூடிய சீக்கிரம்" என்ற வார்த்தைக்குப் பின்னால் எப்படிப்பட்ட வியாக்கியானம் வேண்டுமானாலும் செய்ய இடமேற்படும். கூடிய சீக்கிரம் என்பது ஆண்டுக்கணக்காகவும் ஆகலாம். நல்லெண்ணம் என்பது இவ்விதியில் சிறிதளவேனும் கலந்திருந்தால், கூடிய சீக்கிரம் என்பதற்குப் பதிலாக, ஒருகால வரையறை குறிப்பிடப்பட்டிருக்குமல்லவா?

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஆங்கிலப் பேரவை

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆங்கிலப் பேரவையின் சார்பாக, 21—9—49 புதன் கிழமை மாலை 5-மணிக்கு அண்ணாமலை நகரில், பட்டமளிப்பு விழா மண்டபத்தில்,

துணை வேந்தர் தோழர்
என். ஜி. மணவாளராமானுஜம்
அவர்கள் தலைமையில்
தோழர்
சி. என். அண்ணாதுரை
ஆங்கிலத்தில
சொற்பொழி வாற்றுவார்கள்.

கைத்தொழில் வளர ஆயிரங்கோடி ரூபாய் முதலிடுக!

"இந்தியா பொருளாதாரத் துறையில் பிற் போக்கில் ஆழ்ந்து கிடப்பதற்குக் காரணம், பெரிய தொழில்களைப் பற்றிக் கவலையற்றுக கிடந்ததேயாகும். நம் நாடோ, அல்லது இந்தியச் சமுதாயமோ, 1000 கோடி ரூபாயைத் தக்க பெரிய தொழிற்சாலைகளை அமைப்பதில் முதலீடாகச் செலுத்தினால், 20 ஆண்டுகள் கழித்து, ஆண்டொன்றுக்கு 1000 கோடி ரூபாய் நிகர லாபம் கிடைக்குமென்பது உறுதியாகும்" என்று ஸர் எம். விஸ்வேஸ்வரய்யா கூறுகிறார்.

ஆனால், இந்தஅறிவுரையை இந்திய அரசாங்கம் ஏற்குமா? தொழிற்சாலைகளை வளர்க்கும் வேலையில் இறங்க முன் வருமா? அப்படி முன் வரத் தோன்றினாலும் நிறுவப்படும் தொழிற்சாலைகள் அனைத்தையும் வட நாடுகளிலேயே நிறுவிவிடாமல், தென்னாட்டிலும் வட நாட்டுக்குச சமமாகத் தொழிற் சாலைகளை நிறுவுதல் வேண்டுமென்னும் நல்லெண்ணத்துடன் வேலை செய்யுமா? இவ்வளவு பெரிய மூலதனத்தை முதலீடு செய்ய அரசாங்கத்திடம் பண மில்லையென்று கைவிரிப்பதில் பொருள் இல்லை. அறிஞர்கள் கூறும் அறிவுரையை மேற்கொள்ளல்வேண்டும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.